குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி. எண். 43/2020

PW2- சண்முக சுந்தரம்     த/பெ. அரங்கசாமி
தேதி- 07-07-2021
பக்க எண்- 1
முதல் விசாரணை

சிஎம்பிஎண்.450/2021 மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் (PW2) திரும்ப அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

நான் சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம் தாரமங்கலம் அஞ்சல், 11 வது வார்டு வாத்தியார் தோட்டம், க/எண் 93 என்ற முகவரியில் அரங்கசாமி மகன் ஏ.சண்முகசுந்தரம் ஆகிய நான் கூடுதல் பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதை ஏற்று புகாரின் படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.**இத்துடன் காசோலை எண். 126397 அசல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது** (எதிரி வழக்கறிஞர் மேற்படி அசல் காசோலையை குறியிடு செய்வதற்கு கடும் ஆட்சேபணை தெரிவித்தார்). மேற்படி ஆட்சேபணையுடன் மேற்படி ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது.

எதிர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் ஜவுளி தொழில் செய்து வருகிறேன். நான் தறி போட்டு சொந்தமாக நெய்து ஜவுளி தொழில் செய்து வருகிறேன். எனக்கு சொந்த வீடுள்ளது. எனக்கு நில புலங்கள் உள்ளன. என் வருட வருமானம் சுமார் 8 லட்சம் ரூபாய் வரும். நான் வீட்டு வரி தொழில் வரி செலுத்தி வருகிறேன். வருமான வரி செலுத்தவில்லை. இது போக நான் ஆவின் ஏஜென்சி எடுத்துள்ளேன். எதிரியை எனக்கு எப்படி தெரியும் என்றால் எதிரி பாரம்பரியம் சில்க்ஸ் என்று ஒரு ஜவுளி கடையை வைத்திருந்தார் அந்த கடைக்கு போக வர எனக்கு எதிரியை தெரியும். எதிரியின் கடைக்கு சுமார் 5, 6 முறை போயிருக்கிறேன். அந்த வகையில் எதிரியை எனக்கு பழக்கம். வேறு விதங்களில் எதிரியை எனக்கு பழக்கம் கிடையாது. 01-03-2018-ஆம் தேதியில் எதிரிக்கு நான் ரூபாய் 7 லட்சம் கடனாக கொடுத்ததாக என் புகார், பிரமாண வாக்குமூலம், வழக்கறிஞர் அறிவிப்பில் கூறியுள்ளேன். நான் கடன் கொடுத்ததாக கூறும் தேதியில் எதிரியிடம் கடனுக்கு ஆதரவாக பத்திரம் ஏதும் எழுதி வாங்கிக்கொண்டேனா என்றால் கடன் கொடுத்த தேதியில் பத்திரம் ஏதும் எழுதி வாங்கவில்லை. நம்பிக்கையின் அடிப்படையில்தான் பணம் கொடுத்தேன். 4 அல்லது 5 முறை மட்டுமே எதிரியின் கடைக்கு நான் சென்றிருக்கும் பட்சத்தில் எதிரிக்கு நம்பிக்கையின் அடிப்படையில் நான் கடன் கொடுத்ததாக கூறும் சங்கதி நம்பத்தகுந்தது அல்ல என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் ஏற்கெனவே 3 முறை கடன் வாங்கி சிறு தவணைகளில் பணம் செலுத்தியுள்ளார். அந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான்

எஸ்.டி.சி. எண். 43/2020

PW2- சண்முக சுந்தரம் த/பெ.அரங்கசாமி

தேதி- 07-07-2021

பக்க எண்- 2

குறுக்கு விசாரணை

இம்முறையும் பணம் கொடுத்தேன். நான் என் புகார், பிரமாண வாக்குமூலம், வழக்கறிஞர் அறிவிப்பில் மேற்படி சங்கதியை கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை. எதிரிக்கு நான் கடன் கொடுத்ததாக கூறும் தொகை வட்டிக்கு கொடுத்தது அல்ல. எதிரி என்னிடம் கடன் வாங்கியதாக கூறும் தேதியில் இருந்து 15 நாட்களுக்குள் பணத்தை திருப்பி தருவதாக கூறியிருந்தார். எதிரியிடம் பிறகு 4, 5 முறைகள் பணத்தை திருப்பி தர சொல்லி கேட்டேன். அவர் தவணை கூறிக்கொண்டிருந்தார். பின்னர் 27-09-2018-ஆம் தேதியன்று காசோலையை எனக்கு எதிரி கொடுத்தார். நான் தற்போது தாக்கல் செய்துள்ள அசல் காசோலை தான் எதிரி எனக்கு கொடுத்ததாகும். காசோலையில் உள்ள சங்கதிகளை முழுவதுமாக நிரப்பி எதிரி என்னிடம் கொடுத்தார். வழக்கு காசோலையில் கண்டுள்ள சங்கதிகள் எதிரியின் கையெழுத்தில் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு காசோலையில் “seven lake only” என்று எழுதப்பட்டுள்ளது. எதிரி நன்கு படித்தவர் என்பதால் அவ்வாறு தவறாக எழுத வாய்ப்பில்லை என்றாலும் அதன் அர்த்தம் ஏழு ஏரிகள் என்றாலும் சரியல்ல. காசோலையை ஏற்கெனவே எதிரி நிரப்பி வைத்திருந்தார். எதிரியின் கடைக்கு நான் சென்றபோது நிரப்பப்பட்ட காசோலையை என்னிடம் கொடுத்தார். எதிரிக்கு என்னை யார் என்றே தெரியாது என்றாலும், எதிரி எனக்கு வழக்கு காசோலையை கொடுக்க வில்லை என்றாலும் சரியல்ல. எதிரி என்னிடம் கடன் வாங்கிவில்லை என்றாலும் சரியல்ல. காசேசாயில் எண்ணால் எழுதப்பட்டுள்ள தொகையில் 1 என்ற எண்ணை 7 என்பதாக திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு காசோலையை 28-09-2018-ஆம் தேதியில் வசூலுக்கு செலுத்தினேன் பிறகு 01-10-2018-ஆம் தேதியில் வங்கியால் திருப்பப்பட்டது. ஸ்டாப் பேமெண்ட் என்ற காரணத்திற்காக திருப்பப்பட்டது. 10-10-2018-ஆம் தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். என் வழக்கறிஞர் யார் என்றால் திரு. சதீஸ் என்பவர் ஆவார். அவர் சேலம் அம்மாபேட்டையை சேர்ந்தவர். அவர் எனக்கு உறவினர் அல்ல. அவரும் எனது முதலியார் இனத்தை சேர்ந்தவர் ஆவார். எதிரிக்கும் எனக்கும் பாரம்பரியம் சில்க்ஸ் என்ற கடை மூலமாகதான் பழக்கம் என்று என் வழக்கறிஞர் அறிவிப்பில் கூறவில்லை. எதிரிக்கும் எனக்கும் பாரம்பரியம் சில்க்ஸ் மூலமாக தான் பழக்கம் என்று தற்போது தான் கூறுகிறேன். என் வழக்கறிஞர் அறிவிப்பில் உள்ள

எஸ்.டி.சி. எண். 43/2020

PW2- சண்முக சுந்தரம்      த/பெ.அரங்கசாமி

தேதி- 07-07-2021

பக்க எண்- 3

குறுக்கு விசாரணை

சங்கதிகளை நான் தான் என் வழக்கறிஞருக்கு கூறினேன். என் வழக்கறிஞர் பாரம்பரியம் சில்க்ஸ் என்ற கடைக்குதான் அறிவிப்பை அனுப்பினார். அதை எதிரி 11-10-2018-இல் வாங்கிக்கொண்டார். வாசாஆ 3-இல் பாரம்பரியம் சில்க்ஸ் என்ற முகவரி இல்லை என்றாலும், 11/2/48, 2nd cross Street, Palaniyappa nagar Hasthampatty, Salem என்ற முகவரிதான் உள்ளது என்றாலும், சரிதான். வாசாஆ 3-இல் Anbu Apartment, 488/12K. Nehru Veethi, Medavakkam, Chennai-22 என்ற முகவரி கண்டுள்ளது. மேற்படி முகவரியை நான்தான் வழக்கறிஞருக்கு கொடுத்தேனா என்றால் நான்தான் கொடுத்தேன். (தற்போது புகார்தாரரும் புகார்தாரர் வழக்கறிஞரும் ஆன்லைன்னில் இருந்து வெளியே சென்று திரும்ப ஆன்லைன்னுக்கு வந்தனர்) வழக்கறிஞர் அறிவிப்பில் கண்டுள்ள முகவரிகளுக்கு என் வழக்கறிஞர் பதிவு தபால் அனுப்பியுள்ளார்.அஸ்தம்பட்டி மற்றும் சென்னை இரண்டு விலாசங்களிலுமே எதிரி என் அறிவிப்பை பெற்றுக்கொண்டார். அதற்குண்டான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. தற்போது மேற்படி ஆவணங்களை வைத்துள்ளேனா என்றால் தற்போது என் கையில் இல்லை. என் வழக்கறிஞர் திரு. சதீஸ்ஸிடம் உள்ளன. மேற்படி ஆவணங்களை என் வழக்கறிஞரிடம் பெற்று நீதிமன்றத்தில் ஒப்படைக்க தயாராக உள்ளேன். என் வழக்கறிஞர் அறிவிப்பில் கண்டுள்ள முகவரிக்கு தபால் அனுப்பாமல் பாரம்பரியம் சில்க்ஸ் என்ற கடைக்கு அனுப்பியதால் எனது வழக்கறிஞர் அறிவிப்பு முறையாக சார்வு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. வாசாஆ 3-இல் கண்டுள்ள முகவரிக்கு தபால் அனுப்பாமல் வேறு முகவரிக்கு தபால் அனுப்பியது சட்டப்படியான சார்வு அல்ல என்றால் சரியல்ல. அவ்வாறு அனுப்பிய தபாலில் வழக்கறிஞர் அறிவிப்பு இல்லை என்றாலும், வெற்றுதாள் தான் இருந்தது என்றாலும், எனவே எனக்கு வழக்கு மூலம் ஏற்படவில்லை என்றாலும், சரியல்ல. 20-11-2018-ஆம் தேதியில் வழக்கு தொடுத்தேன். எனது வழக்கு தாக்கல் செய்யும்போது உடன் தாக்கல் செய்த பிரமாண பத்திரிக்கையில் 5ம் பத்தியில் எனது கையெழுத்தில் “மேற்படி அசல் காசோலையை விசாரணையின்போது தாக்கல் செய்கிறேன்” என்று கண்டுள்ளது. மேலும், ஆவணங்கள் பட்டியலில் “காசோலை நேரில் ஆஜர் செய்கிறேன்” என்று கண்டுள்ளது. எனவே எனது வழக்கை தாக்கல் செய்யும்போது என்னிடம் அசல் காசோலை இல்லை

குறுக்கு விசாரணை

என்றால் சரியல்ல. அவ்வாறு என்னிடம் அசல் காசோலை இருந்திருக்கும் பட்சத்தில் அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. முதன் முதலாக ஸ்வார்ன் ஸ்டேட்மெண்ட் கொடுத்தபோதுதான் அசல் காசோலையை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், பிறகு அசல் காசோலையை திரும்ப பெற்றுக்கொண்டேன் என்றாலும் சரிதான். திரும்ப பெற்றுக்கொண்டதற்கான மேற்குறிப்பை எனது புகாரில் நானும் என் வழக்கறிஞரும் செய்துள்ளோம் என்றால் சரிதான். வழக்கு காசோலையை பெற்றுக்கொண்ட நான் எனது முதல் விசாரணையின் போது அசல் காசோலையை தாக்கல் செய்யவில்லை. அப்போது என்னால் தாக்கல் செய்ய இயலாததால் என் வங்கி மேலாளரை அழைத்து காசோலையின் ஸ்கேன் செய்த காப்பியை வாசாஆ 1-ஆக குறியீடு செய்தேன். அசல் காசோலை காணவில்லை என்றறும், எனவே வங்கி மேலாளரை அழைத்து காசோலையின் ஸ்கேன் செய்த காப்பியை குறியீடு செய்யவேண்டும் என்று நீதிமன்றத்தில் குறிப்பாணை தாக்கல் செய்தேன். மேற்படி குறிப்பாணையில் “எங்கோ காணவில்லை” என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. “புகார்தாரர் வசம் தவற விட்டதால்” என்று கூறியுள்ளேன். தற்போது சிஎம்பி எண்.450/21 என்ற மனுவில் பீரோவின் அடியில் காசோலை கிடைத்தது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அசல் காசோலையை குறித்த நேரத்தில் ஒப்படைக்காமல் நீதிமன்றத்தின் பொன்னான நேரத்தை வீணடித்து மற்றும் வங்கியின் நேரத்தை வீணடித்து தற்போது பொய்யாக சாட்சி கூறுகிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்க எனக்கு எவ்வித விருப்பமும் இல்லை என்னால் சரியான நேரத்தில் அசல் காசோலையை தாக்கல் செய்ய இயலாததால் வங்கி மேலாளரை அழைத்து ஸ்கேன் காப்பியை தாக்கல் செய்தேன். தற்போது அசல் காசோலை எனக்கு கிடைத்ததால் தற்போது தாக்கல் செய்கிறேன். குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண். 5, சேலம்-இல் திரு. சதீஸ் என்ற வழக்கறிஞர் மூலமாக எஸ்.எம். விஜயகுமார் மற்றும் செந்தில்குமார் ஆகியோர் இவ்வழக்கின் எதிரி மீது வழக்கு தொடுத்துள்ளனர் என்றால் அது பற்றிய விபரம் எனக்கு தெரியாது. செந்தில்குமார் என்பவர் மீது எதிரியின் கணவர் கற்பூரசுந்தரபாண்டியன் சேலம் மாநகர காவல் ஆணையரிடம் 22-06-2019-இல் புகார் கொடுத்து அது பேர்லேண்ட்ஸ் காவல் நிலையத்திற்கு பார்வார்டு செய்யப்பட்டது என்றால் அது பற்றிய விபரம் எனக்கு தெரியாது. மேற்படி புகாரின் அடிப்படையில் 29-07-2019-ஆம்

எஸ்.டி.சி. எண். 43/2020

PW2- சண்முக சுந்தரம்     த/பெ.அரங்கசாமி

தேதி- 07-07-2021

பக்க எண்- 5

குறுக்கு விசாரணை

தேதி அன்று செந்தில்குமார் பேர்லேண்ட்ஸ் காவல் நிலையத்தில் ஆஜராகி ஒரு முச்சலிக்கா எழுதி கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. திரு. சதீஸ் என்ற வழக்கறிஞர் மற்றும் வி. செந்தில்குமார் ஆகியோருக்கு நான் நெருங்கிய உறவினர் என்றால் சரியல்ல. மேற்படி உறவு முறையின் மூலமாகதான் இவ்வழக்கு என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலம், எதிரிக்கும் எனக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. செந்தில்குமார், விஜயகுமார், ஏ.எம். சதிஸ் மற்றும் நான் ஒரு நிக்சன் என்ற நபரின் கையாட்கள் என்றால் சரியல்ல. மேற்படி நபர்கள் யாருமே எனக்கு தெரியாது. செந்தில்குமார் என்பவர் எனது ஊர்காரர். ஏ.எம். சதீஸ் என் வழக்கறிஞர் அவ்வளவுதான். செந்தில்குமார் எனக்கு அறிமுகம் இல்லாததால் அவரது தொழில் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி செந்தில்குமார் தொடுத்துள்ள வழக்கிலும் **“seven lake”** என்று உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி நபர்கள் அனைவருமே ஒரு குழுவாக இயங்கி இந்த எதிரியின் மீது பொய் வழக்கு தொடுத்துள்ளோம் என்றாலும், எதிரி விடுதலை செய்யப்படவேண்டியவர் என்றாலும் சரியல்ல.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

(இந்த விசாரணை மைக்ரோசாப்ட் டீம்ஸ் என்ற ஆன்லை அப்ளிகேசன் மூலமாக நீதிமன்ற நடுவர் முன்னிலையில் எதிரி வழக்கறிஞர், புகார்தாரர் , புகார்தாரர் வழக்கறிஞர் ஆகியோர் ஆஜராகி நடத்தப்பட்டது )

(நீதிமன்றத்தில்  இந்த விசாரணை மற்றும் சாட்சியம் பிரிண்ட் எடுக்கப்பட்டது மேலும் புகார்தாரர் மற்றும் எதிரி வழக்கறிஞர்களுக்கு ஈ மெயில் (thiyagu1177@gmail.com and vijayaraghavan1158@gmail.com) மூலம் அனுப்பப்பட்டது.  அ. சா 2 இன் கையொப்பம் இட வேண்டும் என்றும் அந்த நகலை நீதி மன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. )

ஒம்/எம்.ஏ. சுவேதாரண்யன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
ஓமலூர்.